ARTICLE 32 | Research Article – Peer Reviewed | Article ID: TAJP-2026-00091
Vol. 20, No. 01 (October 2026) – Part II | pp. 30–35
Received: 3 October 2026 • Accepted: 3 October 2026

கன்னியாகுமரி மாவட்ட காணிக்காரர்கள் வழிபாட்டு முறைகள்

முனைவர் .விஜயலட்சுமி ச[1,*]

[1]உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை, நியூ பிரின்ஸ் ஸ்ரீ பவானி பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி, சந்தோசபுரம், சென்னை - 600073., India

***Corresponding author / தொடர்பு ஆசிரியர்:** முனைவர் .விஜயலட்சுமி ச — tamilseminar12@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

மனித இனம் ஐம்பூதங்களின் அற்புதங்களைக் கண்டு வியந்து அவற்றை வணங்கத் தொடங்கியமையே கடவுள் நம்பிக்கையின் தொடக்கமாகும். இயற்கையின்பால் கொண்டுள்ள அச்சமே மக்கள் சமுதாயத்தைக் கடவுள் நம்பிக்கைக்குக் கொண்டு சென்றதென்பது மானிடவியலாரின் கருத்து. நிலம் மற்றும் வாழும் இருப்பதை வைத்தே அவர்களின் நம்பிக்கை வழியாகக் மக்களிடையே நிகழ்த்தும் செயல்பாடுகள் கடவுளைக் காணமுடிகின்றது. இது அவர்கள் வாழ்கின்ற நிலப்பகுதியின் சூழ்நிலையின் காரணமாகவும், அது பயத்தின் விளைவாகவும் இருக்கலாம். இதனை, "இயற்கையின் சக்திகளைக் கண்டு அச்சமடைந்த மனிதன் அவற்றில் உயிர்ப்பு இருப்பதாக எண்ணினான். இறந்தவர்களது ஆவிகள் தங்களுடனேயே வாழ்கின்றன. அவற்றின் ஆட்சியே இயற்கைச் சக்திகளாக வெளிப்படுகின்றன என்றெல்லாம் காணிக்கார்கள் நம்பினான். எனவே இவை குறித்த நம்பிக்கைகளும் இயற்கையின் மீதான அச்சமுமே கன்னியாகுமரி காணிக்கார பழங்குடிமக்களிடையே கடவுள் நம்பிக்கையாக உருவெடுத்தன"இது 'இறப்பு, நோய்கள் முதலானவற்றை இயற்கையின் கோபமாக நம்பி வணங்கிய நிலையிலிருந்து பல வகையில் வழிபட்டுவருகின்றனர் அதனை ஆய்வதாகவே இந்த ஆய்வு அமைகிறது.

Keywords / திறவுச் சொற்கள்: காணி; காணிக்கார்கள்; கொடுதி; காலட்டுப்பேய் கொடுதி; கார்த்திகை கொடுதி; ஆவிக்கொடுதி; மழைக்கொடுதி.

How to cite / மேற்கோள் காட்டும் முறை: ச, மு. . (2026). கன்னியாகுமரி மாவட்ட காணிக்காரர்கள் வழிபாட்டு முறைகள். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), Volume 1, –.

முன்னுரை

இந்தியாவின் கிழக்கு, மேற்குத் தொடர்ச்சி மலைகளில் பெரும்பகுதியைத் தன்னுள் கொண்டு, மிகுந்த இயற்கை வளம் மிக்க மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. கல்வி யிலும் அறிவில் துறையிலும் வளர்ச்சி பெற்றவர்கள் அதிகமிருக்கும் இம்மாநிலத்தில், மிகவும் பின்தங்கிய நிலையில் பல வகைப்பட்ட பழங்குடிமக்கள் வாழ்கின்றனர் . இவர்களில் பெரும்பான்மையோர் மலைப்பகுதிகளில் வாழ்ந்து வருகிறார்கள். "தமிழ்நாட்டின் வடபகுதிகளிலிருந்தும் (காஞ்சிபுரம், மதுரை, திருநெல்வேலி மற்றும் இவற்றைச் சார்ந்துள்ள பகுதிகளிலிருந்து) மலைப்பகுதிகளுக்குச் சென்று அங்கு வாழ்ந்த பழங்குடியினருடன் கலந்து நிரந்தரமாகத் தங்கி விட்டவர்கள் மிக்க உள்ளனர், அதில் குறிப்பாக, தமிழகத்தின் சமவெளிப்பகுதிகளில் காணப்படும் காணிக்காரர்களின் சமயத் தொடர்பான நம்பிக்கைகளும். இயற்கை, ஆவி, சிறுதெய்வ

Vol. 20, No. 01 (October 2026) – Part II • ISSN 3049-0723 (Online) • ISSN 3107-7781 (Print)

வழிபாட்டு முறைகளும் பழக்க வழக்கங்களும் முற்காலந்தொட்டே தொடர்ந்து இன்று வரை காணமுடிகின்றன. அவர்களின் வழிபாட்டு முறைகளில் தனித்து காணப்படும் கன்னியாகுமரி மாவட்ட காணிக்காரர்கள் வழிபாட்டுமுறைகள் பற்றி மட்டுமே ஆராய்வதே இக்கட்டுரையின் முதன்மையான நோக்கமாகும்.

காணி சொல் விளக்கம்

காணி என்பது நிலத்தைக் குறிக்கும். நிலத்திற்குச் சொந்தக்காரரைக் (மலை நிலத்தை ஆள்பவர்) காணிக்காரர் எனக் கூறுவர். இவர்கள் பொதிகை மலையிலுள்ள அகத்தியர் சிகரம் கடல் மட்டத்திலிருந்து 6000 அடி உயரமுடையது. காணிக்காரர்களின் குருவாகிய அகத்தியமுனிவர் அகத்தியர் சிகரத்தில் இன்றும் தவம் செய்து கொண்டிருப்பதாகக் காணிக்காரர்கள் நம்புகின்றனர். எனவே மலைவாழ்மக்களாகிய காணிகள் வருடத்திற்கொருமுறை பாபநாசத்தில் இருக்கும் அகத்தியர் மலைக்குச் சென்று வழிபடுவதுடன் அம்மலையைப் புனித மலையாக நினைத்துப் போற்றுகின்றனர். பொதிகை மலைப்பகுதியில் வாழ்ந்து வந்த காணிக்காரர்கள் இடைக்காலத்தில் மழைவளம் குறைந்துவரவே, தொழில், உணவு, நீர்வளம், நிலவளம் போன்றவற்றின் வசதிதேடி இடம் பெயர்ந்து செழிப்புள்ள குமரி ஓலைப்பகுதிகளில் குடியமர்ந்தனர். அவ்வாறு குடியமர்ந்த **'காணியர் எனப் பொதுவாக வழங்கப்படும் காணிக்காரர் தென்திருவிதாங்கூர் மலைகளை வாழ்விடமாகக் கொண்ட காட்டினக் குடிகளாவர்'** எட்கர் தர்ஸ்டன் (எட்கர் தர்ஸ்டன், 1975:120) அவர்கள் குறிப்பிடுள்ளார்.

மேலும் "**மதுரையில் பாண்டிய மன்னர்களை எதிரிகள் தாக்கித் தோல்வியுறச் செய்த போது மன்னரின் மெய்க்காவலர்கள் பயந்து தென்மாவட்டங்களில் ஓடி ஒளிந்தனர். ஒளிந்தவர்களில் சிலர் நெல்லை மாவட்டத்திலுள்ள பொதிகை மலைப்பகுதியில் அகத்திய முனிவரைக் கண்டு ஆறுதல் பெற்று மலைப்பகுதிகளில் குடியேறினர். அவ்வாறு குடியேறியவர்கள் கையில் வேல் வைத்திருந்தனர். அந்த வேலன்மாரே காணிக்காரர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள் என ப. சூரியன் விளக்கம் தருகின்றார்**. " (ப. சூரியன் காணி, வயது 58, V), மேலும் இக்குறிப்பிகள் இருந்து பார்க்கையில் காணிக்காரர்கள் மலைப்பகுதியில் இருப்பிடம் கொண்டவர்களாகவும் அவர்களின் அடையாளமாக கையில் வேல் கருவியினை வைத்திருக்கும் மக்களாகவும் இருப்பதை அறியமுடிகிறது.

காணிக்காரர்கள் வழிபடும் தெய்வங்கள்

காணிக்காரர்கள் ஐம்பூதங்களோடு, சூரியன், சந்திரன், கல், மரம் போன்ற இயற்கைப் பொருட்களையும் வழிபடுகின்றனர். இறந்தோரின் ஆவி மற்றும் வனதேவதைகள் குறிப்பாக மலங்காளி, வாழாற்றுமாடன், காலாட்டுப்பேய், வடக்கன்பேய், வரம்பொதி ஆயன், அடங்காட்டு ஆயன், கரும்பாண்டியம்மன், பத்திரகாளி, மாரியம்மன், பேச்சியம்மன் போன்ற நூற்றுக்கும் மேற்பட்ட சிறுதெய்வங்களோடு இறந்தோரின் ஆவிகளையும் வழிபாடு செய்கின்றனர். இவ்வழிபாட்டு முறைகளிடன் ஆதிச்சன் வழிபாடு, பால்மரங்கள் வழிபாடு, சிலைகளற்ற வழிபாட்டு முறை, கொடுதி வழிபாட்டு முறைகள் முதலானவைகளும் வழிபுகின்றனர். அவற்றில் தனித்துவமாக

Vol. 20, No. 01 (October 2026) – Part II • ISSN 3049-0723 (Online) • ISSN 3107-7781 (Print)

காணப்படும் கொடுதி வழிபாட்டு முறைகள் மட்டும் இக்கட்டுரையில் விரிவான முறைகளில் இப்பகுதியில் காணலாம்.

ஆதிச்சன் வழிபாடு

இயற்கைத் தெய்வங்களுள் ஆதிச்சன் வழிபாடு (ஆதித்தன், சூரியன்) சிறப்பிடம் பெறுகிறது. வாழ்க்கைக்குத் தேவையான எந்தச் செயலையும் செய்ய முற்படும்போது, முதலாவதாக திறந்த வெளியில் புது மண்பானையொன்றில் அரிசிப் பொங்கல் செய்து; தலைவாழை இலைவிரித்து, பொங்கல், பூ, பழம், குங்குமம், பஸ்பம் ஆகியன படையலிட்டுக் குந்திரிக்கம் (சாம்பிராணி) புகைத்து சூரியபகவானை நோக்கி வணங்குகின்றனர். பொங்கலினை அனைவருக்கும் பகிர்ந்தளித்து நினைத்த காரியத்தைத் தொடங்குகின்றனர். ஆதிச்சன் வழிபாட்டின் முக்கியத்துவம் குறித்து வினவியபோது, காட்டில் வாழும் எங்களுக்கு ஆதிச்சன் இல்லையெனில் வாழ்க்கையேது என்ற நிலையில் இடம்பெற்றுள்ளனர்.

பால்மரங்கள் வழிபாடு

காணிக்காரர்கள் வேம்பு, வேங்கை, ஆல், அரசு, பலாப் போன்ற மரங்களில் தெய்வம் உறைந்திருப்பதால் அவற்றிலிருந்து பால்வடிவதாக நம்பிக்கை கொண்டுள்ளனர். எனவே அவை வழிபட வேண்டியன என்றும் கூறுகின்றனர்.

சிலைகளற்ற வழிபாட்டு முறை

சிறுதெய்வங்களில் மலங்காளியை முதன்மையான குலதெய்வமாக நினைத்து வழிபாடு செய்கின்றனர். சிறுதெய்வங்களுக்கெனக் காணிக்காரர்கள் உருவச்சிலைகள் வைப்பதில்லை. கூம்பு வடிவத்தில் அமைந்திருக்கும் கல்லைச் சிறிய மண்பீடத்தின் மீது வைத்து; அதனையே சிறுதெய்வங்களாக நினைத்து வழிபடுகின்றனர்.

கொடுதி வழிபாட்டு முறைகள்

கொடுதி என்பது காணிக்காரர்கள் வழிபடும் தெய்வங்களுக்கு எடுக்கின்ற கொடை போன்ற வழிபாட்டு நிகழ்வைக் குறிக்கும். இக்கொடுதி வழிபாடானது 1. காலாட்டுப்பேய்க் கொடுதி, 2.கார்த்திகைக் கொடுதி, 3. மலங்காளிக் கொடுதி, 4. ஆவிக்கொடுதி, 5. மழைக்கொடுதி என்ற பல நிலைகளில் காணிக்காரர்கள் வழிபட்டு வருகின்றனர்.

காலாட்டுப்பேய்க் கொடுதி

காணிக்காரர்கள் விபத்துக்கள், இயற்கையின் சீற்றம் போன்றவற்றினால் துன்பங்கள் ஏற்படும் சூழலில் தங்களைக் காலாட்டுப்பேய் பாதுகாக்கின்றது என்ற நம்பிக்கையுடன் இருக்கின்றனர். எனவே ஆண்டுதோறும் சித்திரை மாதம் கடைசிச் செவ்வாய்க்கிழமை இரவில் எல்லாக் குடியிருப்புகளிலும் காலாட்டுப்பேய்க்குக் கொடுதி நடத்துவர். கொடுதிக்கு முன்னர் ஏழு முழு வாழை இலைகளைச் சேர்த்து விரித்து அதன் மேல்; அவல், பொரி, பழம், தேங்காய், கமுகம்பூ, இளநீர், கள், சாராயம், இறைச்சி, மஞ்சணை (சுண்ணாம்பும் மஞ்சள் பொடியும் கலந்த கலவை), குங்குமம், பஸ்பம் ஆகியவற்றைப் படைத்து வழிபாடு செய்வர். அப்போது பிலாத்தியின் மீது துள்ளல் ஏற்பட்டு இரத்தப்பலி கேட்டால் கோழியைப் பிடித்து பலிகொடுப்பர், பின்னர் ஏனைய கொடுதி விழாக்கள்

நடைபெறும் போதும் முதலில் காலாட்டுப்பேய்க்குப் படையலிட்ட பின்னரே கொடுதி விழாவை நடத்துகின்றனர். இவ்வழிபாட்டு முறையில் முதல் நிகழ்வாக படையல் முதன்மையானதாக இருப்பதை காணமுடிகிறது.

கார்த்திகைக் கொடுதி

வனதேவதைகளைக் கோபத்திற்குள்ளாக்கினால்; காட்டிற்குள் செல்லும்போது மரங்கள், பாறைகள், ஆறுகள் போன்றவற்றில் நிலைத்திருக்கும் வனதேவதைகள் தங்களை வழிமறித்து ஆபத்தான இடங்களில் கொண்டு விட்டு விடும். அதோடு அவை காட்டிலுள்ள விலங்குகள், பறவைகள் போல் காட்சியளித்துத் தங்களை அச்சுறுத்தும். கார்த்திகை மாதத்தில் கொடிய கொள்ளை நோய்களைத் தங்களுக்களித்துத் துன்புறுத்தும் என்றெல்லாம் வனதேவதைகள் மீது காணிக்காரர்கள் நம்பிக்கை கொண்டிருக்கின்றனர்.

கார்த்திகை மாதத்தின் ஆரம்பநாள் முதல், கடைசி வெள்ளிக்கிழமை வரைக் காணிக்காரர்கள் தங்கள் குடியிருப்புகளில் இரவில் பசனைப்பாடி வனதேவதைகளை மகிழ்விக்கின்றனர். குடியிருப்புக்களில் கொடிய நோய்களைத் தராமல் தடுத்து நிறுத்தியதற்கும், வனத்தில் தங்களைப் பாதுகாத்து உதவியமைக்கும் நன்றிக்கடனாகக் கார்த்திகை மாதத்தின் கடைசி வெள்ளிக்கிழமை இரவில் பழுத்த வாழைக்குலைகளைக் காட்டில் படைத்து வனதேவதைகளை வேண்டி பசனைப்பாடி, பழங்களைக் காட்டின் நான்கு திசைகளிலும் வீசி எறிகின்றனர். எறியும் பழங்களை வனதேவதைகள் உண்டு மகிழும் என்பது காணிக்காரர்களின் நம்பிக்கை. இக்கொடுதி விழாவை; வனதேவதைகளுக்கு நன்றி செலுத்துவதோடு, அவற்றை அமைதிப்படுத்தி மகிழ்விப்பதாகவும் நம்பி, காணிக்காரர்கள் ஆண்டுதோறும் கொண்டாடி வருகின்றனர்.

வனவிலங்குகளிடமிருந்துதங்களைப் பாதுகாப்பதற்காகக் காணிக்காரர்கள் மலங்காளியை வழிபடுகின்றனர். முதன்மையான குலதெய்வமாகிய மலங்காளிக்கு ஆண்டுக்கொருமுறை கொடுதி நடத்துகின்றனர். கொடுதி பெரும்பாலும் பங்குனி, சித்திரை, தை ஆகிய மாதங்களில் கடைசி வெள்ளிக்கிழமையன்று நடைபெறுகின்றது. குறிப்பிட்ட நாளன்று இரவு மலங்காளிக்குக் கோழி, ஆட்டுக்கடா போன்றவற்றை உயிர்ப்பலி கொடுத்து, தேங்காய், பூ, பழம், அவல், பொரி, பஸ்பம். கஞ்சா, மதுவகைகள், மாமிசம் போன்ற பொருட்களைப் படைத்து வழிபடுவர். வழிபாட்டின் போது மலங்காளியிடம் காணிமக்களாகிய தங்களுக்கு ஏற்படுகின்ற துன்பங்களைக் களைந்து, காவல்காத்து உதவிகள் செய்திடுமாறு வேண்டுவர். அப்போது மலங்காளியின் பெருமையினைக் கூறிப் பாடுவர் அதனை

"வெள்ளி வெளிக் கெரியுண்ணு வெண்கலங்கள் ஓசையிடுண்ணு
தங்க வெளக் கெரியுண்ணு தழை நெறஞ்சக் காடாணு
கூந்தப் பள யாணு தணுப் பெடுக்குன்ன கானலாணு
ஏந்துப் பலகையின்னு தொண இருப்பா மலங்காளி
சங்கு மொழங்கிடாணு சுடுகாட்டுச் சண்டாளராணு
கானாற்றுப் பொய்கையாணு காவல் கொண்ட இடமாணு

காணிகள் நெங்களுக்கெல்லாம் நின் காவலே கேட்குனோம்

அம்மே மலங்காளீ!" (ச. விசோம்பரன் காணி, வயது -67, XIV) என்று பாடி முடிந்ததும் அவர்கள் கொக்கறை, சீங்குழல் போன்ற இசைக்கருவிகளை இசைத்து ஒலி எழுப்புகின்றனர். அவ்வேளையில் பிலாத்தி மந்திரங்கள் சொல்லி மலங்காளியை வரவழைப்பார். தெய்வம் பிலாத்தியின் மீதோ அல்லது வேறு யாதானுமொரு காணியின் மீதோ வந்திறங்கி ஆடும்.

ஆவிக்கொடுதி

காணிக்காரர்களிடம் ஆவி வழிபாடு மிக அழுத்தமாக உள்ளது. பொதுவாக ஆண்டிற்கொருமுறை ஆடி மாதத்தில் வரும் அமாவாசை நாளன்று ஆவிகளுக்கு வழிபாடு நடத்துகின்றனர். இதனை நினைவுபடுத்தும் வகையில் '**பழங்குடி மக்களிடையே இறந்தவர்களின் ஆவிகள் தங்களைத் துன்புறுத்துகின்றன; அல்லது உதவி செய்கின்றன என்ற நம்பிக்கையில் அவை வணங்கப்பட்டன' என்னும் ஐ.சி. ஜார்வியின் (1972: 4)** கூற்று தொளிவுபடுத்துகிறது. இத்தகைய ஆவி வழிபாட்டினைச் 'சாவு வழிபாடு' என்று காணிக்காரர்கள் கூறுகின்றனர் யானை, புலி, பாம்பு போன்றவற்றால் இறந்தவர்களின் ஆவிகளை முறையே ஆனச்சாவு, புலிச்சாவு, பாப்பிச்சாவு என்றும்; வயது முதிர்ந்து இறப்பதை முதுசாவு என்றும்; திருமணத்திற்கு முன் இளம் வயதில் இறந்தால் கன்னிச்சாவு என்றும் பல பெயர்களில் இறந்தவர்களை அழைப்பதோடு, அவர்களுக்குத் தனித்தனியாகப் படையலிட்டும் காணிக்காரர்கள் கொடுதி வழிபாட்டு முறையினை நிகழ்த்திவருகின்றனர்.

மழைக்கொடுதி

நீர்வளத்தை மாரியாகக் காண்பது பழங்குடிமக்களின் மரபு. மலைவாழ் காணிக்காரர்கள் மழையை மாரியம்மனாக நினைத்து வழிபடுகின்றனர். மலைத்தெய்வங்கள், ஆவிகள் ஆகியவற்றிற்குக் கொடுதி கொடுக்காமையும், மக்களிடையே காணப்படும் ஒழுக்கமின்மையும் மழையின்மைக்குரிய காரணங்களாகி, மழை பெய்யாமல் வறட்சி தோன்றுகிறது; வருடந்தோறும் வழக்கமாகப் பொழியும் காடுகரிஞ்சான்', 'காடுதிருத்தான்' என்றழைக்கப்படும் மழைகள் பெய்யாவிட்டால், அவ்வருடம் பருவமழையும் பொய்த்துவிடும் என்பது காணிக்காரர்களின் நம்பிக்கை. காணிக்குடியிருப்புகளில் இருக்கும் முதியவர்கள் மழையின்மையால் மக்கள்படும் இன்னல்களை நினைத்துத் தெய்வங்களிடம் தினமும் தூங்குமுன்னர் இரங்கி வேண்டுகின்றனர். அப்பொழுது முதியவர்களின் கனவில் மழைத்தெய்வத்திற்குக் கொடுதி நடத்துமாறு கூறப்பட்டால், உடனே காணிக்காரர்கள் ஒன்று சேர்ந்து கொடுதி நடத்துவதற்குரிய இடம், நாள் ஆகியவற்றை முடிவு செய்வர். அவ்வழிபாட்டின் போது குறையிரந்து வேண்டல் முறையும் காணமுடிகிறது.

காணிக்கார்கள் இந்தமுறையினை பெரும்பாலும் குடிலின் முன்பகுதியில் ஏழு வாழை இலைகளில் சோறு, இளநீர், மதுவகைகள், கஞ்சா, வெற்றிலை, பழம், பூ, மஞ்சணப்பெட்டி, பஸ்பம் போன்றவைகளைப் படைத்து வைப்பர். பகல் பன்னிரெண்டு மணியளவில் காணித்தலைவர்களும், மக்களும் குறையிரந்து வேண்டும் நிகழ்ச்சி நடைபெறும் போது

"மேலுலவு பாட்டமாருக்கு குறிவந்து அணையினது
மேலுலவு பாட்டமாரு பூவுலகு செல்லினது
சாத்தனென்னும் மாயவனும் வாயுவைக் காணினது
சாத்தனென்னும் மாயாவு பூவுலகு சொரிச்சினது
வெள்ளிக்கதிரு பூமாடம் அவரு சொரிச்சினது
அவரு கண்டு கேட்டு அங்ஙனமே இருக்கினது
பந்திரெண்டு மல முத்திமாரும் பொன்னின்னா பூவுலவு
காணிக்குடிச் சாவுகளும் பொன்னின்னா பூவுலவு
நூற்றொண்ணு புத்திரமாரு பொன்னின்னா பூவுலவு

படச்ச படபொருளு அவரு கண்டு கேட்டு இருக்கினது

இண்ணுதொட்டு ஏழாம்பக்கம் வருமிண்ணு பறயினது"(ச.இராமன் காணி, வயது -70, 1) என்று பாடலைக் கூறி பிலாத்தி வெள்ளிக் கதிரு பூமாடத்திலிருந்து மழைக்காக வேண்டுவார். வெள்ளிக் கதிரு பூமாடம் என்பது கொடுதி கொடுப்பதற்கு அமைத்திருக்கும் பந்தலைக் குறிப்பதாகும். அனைவரும் குறையிரந்து வேண்டிக் கொள்ளும் போது சாத்தனென்னும் 'மாயாவு' ஆவிகளிடம் பூவுலகின் அடியாரது குறைகளைத் தீர்க்கும் படியாகக் கூறுவதாகவும்; அதற்கு உடன்பட்ட ஆவிகள் ஒன்றுசேர்ந்து தன் இனத்தாருக்கு மழைவளமும், விளைச்சலும் தந்திடும்படியாக மாரியம்மனிடம் வேண்டுவதாகவும் காணிக்கார்களின் நம்பிக்கை சார்ந்த முறையில் இவ்வழிபாட்டு முறை காணமுடிகிறது.

முடிவுரை

காணிக்காரர்கள் வழிபடும் தெய்வங்களுக்கு நிகழ்த்துகின்ற கொடை போன்ற வழிபாட்டு நிகழ்வைக் 'கொடுதி' என்றழைக்கின்றனர். கொடுதி விழாக்களின்போது காலாட்டுப்பேய்க்கு முதல் படையலிடுகின்றனர். வன தேவதைகளுக்குக் 'கார்த்திகைக் கொடுதி' நிகழ்த்தினால் கொடிய கொள்ளை நோய்கள் தங்களைத் தாக்காது என்பது காணிக்காரர்களின் நம்பிக்கை. காணிச்சமூகத்தாரிடம் ஆவிவழிபாடு குறித்த நம்பிக்கை மிக அழுத்தமாக இருப்பதால்; ஆண்டிற்கொருமுறை ஆடிமாதம் அமாவாசை நாளன்று ஆவிகளுக்கும் வழிபாடு நடத்துகின்றனர். வருடந்தோறும் வழக்கமாகப் பொழியும் 'காடுகரிஞ்சான்', 'காடுதிருத்தான்' என்றழைக்கப்படும் மழைகள் பெய்யாவிட்டால் 'மழைக்கொடுதி' நிகழ்த்தும்போது மழைப்பொழியும் என்பது காணிக்காரர்களின் நம்பிக்கை. காணிக்காரர்களின் வழிபாட்டு முறையானது சங்கியல் நிலையிலும் அதிகம் படையல் நிகழ்வினையும் வெளிப்படுத்துகிறது .

துணைநூற் பட்டியல் (References)

1. இரத்தினம். க- தென்னிந்திய குலங்களும் குடிகளும், தொகுதி- மூன்று தமிழ் பல்கலைக்கழகம் வெளியீடு, தஞ்சாவூர், முதல்பதிப்பு: 1987.
2. சக்திவேல். சு. தமிழ்நாட்டு பழங்குடி மக்கள் வாழ்வும் வரலாறும், மணிவாசகர் நூலகம், 89- லிங்கிச்செட்டி தெரு, சென்னை-600001, முதல்பதிப்பு :1980.
3. ஸ்டீபன். ஞா- கொக்கறை, காரணிக்காரர் வாழும் வழிபாடும் திணை வெளியீடு பெருமாள்புரம் திருநெல்வேலி – 627007, முதல்பதிப்பு: 1997.

© 2026 முனைவர் .விஜயலட்சுமி ச. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..